**மினிபே பிரதேச சபையின் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மினிபே பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மினிபே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய தினசரி தேவைப்பாடுகள் தொடர்பிலான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் காட்டப்படும் தேவைகள் தொடர்பில் விஷேட நிதி ஒதுக்கீடு உட்படும்.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஓப்பிடப்படும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்படல் வேண்டுமென நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுககளை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் வெளி நிறுவனங்களின் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்ட 03 செயற்திட்டங்களுக்குரிய ரூபா297000 ஆன நிறுத்தி வைத்தல் தொகை நிர்மாண கடன்பட்டோராகவும் செலுத்த வேண்டிய வைப்பாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 இல் கணக்குகளை தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஆ) 14 பொருள் விடயங்களுக்குரிய ரூபா 193,795 ஆன எழுதுகருவி இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இருப்புப் பதிவேடுகள் சரியாக தயாரிக்கப்படுவதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட வேண்டும். | இருப்பு பதிவேடுகளை நாளாந்த வரையாக்கி நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2. இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு- | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 6,055,662 ஆக இருந்த போதும் வைப்புப் பதிவேற்றின் பிரகாரம் மீதி ரூபா 6,043,634 ஆக இருந்தமையால் ரூபா 125,528 ஆன வேறுபாடு காணப்பட்டது | வேறுபாடுகளுக்குக் காரணங்கள் கண்டுபிடித்து எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடு இனங்காணப்பட்டு கணக்குகுள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொது களஞ்சியம், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்தி இயந்திராதிகள் பதிவேடு முறையாக பேணப்படாமை காரணமாக ரூபா 14,023,545 ஆன சொத்து மீதிகளை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்கில் சீராக்ககூடிய வகையில் தயாரிப்பகாக அறிவிக்கப்பட்டிருந்தது | பயன்பாட்டுப் பதிவேடுகள் நாளதுவரையாக்கி நிதிக் கூற்றுக்கள் மற்றும் பட்டோலைகள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.7. இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள 2 ஹொட்டெல்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் போது அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,014,634 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,225,811 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹசலக பொது வியாபாரச் சந்தை வீதி மற்றும் பொதுச் வியாபார சந்தை - பல்லேவத்த நிலுவை கடைகளுக்குரிய அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 2,023,279 ஆக இருந்ததுடன் அதில் ரூபா1,704,779 தொகை ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டு மீதிகளாக இருந்தன. நிலுவையை அறவிடுவதற்காக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் உடன்படிக்கைக் காலம் குறிப்பிடப்படாமை மற்றும் உடன்படிக்கையில் குறைபாடுகள் காணப்பட்டமை காரணமாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்ததுடன் இந்த கடைகள் அமைந்துள்ள காணிகளின் உரித்து சபைக்கு இல்லாமை காரணமாக உரித்தை கையேற்பதற்காக வழக்குத் தொடர்வதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே ஹசலக நகரில் 20 கடைகளுக்கு உரியதாக அறவிடப்பட வேண்டிய ரூபா 8,711,434 ஆன நிலுவை வடை வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | கணக்காய்வுடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை மீதிகளை அறவிடுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் போதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1997 ஆம் ஆண்டு தனியார் தரப்பினரின் கட்டிடமொன்று அத்திவாரமொன்றை அப்போதிருந்த தலைவரால் உடைத்து அகற்றப்பட்டமையால் நீதிமன்றத்தால் ஏற்பட்ட நட்டத்துக்காக ரூபா 24,709 கொடுப்பனவு செய்வதற்கு கட்டளையிடப்பட்டிருந்த போதும் அத்தொகையை செலுத்தாமை காரணமாக மீண்டும் நீதிமன்ற கட்டளையின் பேரில் சபைக்கு ரூபா 530,500 தொகையை குறித்த தரப்பினருக்குச் செலுத்த வேண்டியிருந்தது. அது தொடர்பாக பரிசோதனை நடத்தி சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பட்டுள்ள நட்டம் மற்றும் அதன் பொறுப்புக்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக உள்ளூராட்சிமன்ற ஆணையாளரால் பரிசோதனைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை வழங்கப்பட்டதன் பின்னர் அறிக்கையிடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையின் நீர் பாவனையாளரின் எண்ணிக்கை 1651 ஆக இருந்த போதும் 438 நீர் பாவனையாளர்களிடமிருந்து மாத்திரம் நீர்மானியின் பிரகாரம் குறிப்பிட்ட கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே செயலற்ற நீர்மானிகளின் எண்ணிக்கை 795 மற்றும் நீர்மானி பொறுத்தப்படாத பாவனையாளர்களின் எண்ணிக்கை 411 ஆக இருந்தன. | குருலுபொத நீர்வடிகட்டி தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டவுடன் அனைத்து நீர்ப் பாவனையாளர்களுக்கும் இணைப்பு வழங்கி முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நீர்மானிகளைப் பொருத்தி முறையாக நீர் வழங்கலை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீர்க்கட்டணம் ரூபா 4,529,064 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 618,896 தொகைநீர் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டிருந்த | நிலுவை நீர் இணைப்பு துண்டிப்பு சட்ட வழிகளிலிருந்து நடவடிக்கை எடுத்தல் வீட்டுக்கு வீடு உத்தியோகத்தர்களை அனுப்பி அறவிடல் | உடன்படிக்கை பிரகாரம் நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |

| | | |
|---|---|---|
| பாவனையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டி காணப்பட்டது. அவ்வாறே இந் நிலுவைக் கட்டணங்களை அறவிடுவதற்கு உடன்படிக்கைப் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மற்றும் நடமாடும் சேவைகளை நடத்தி அறவிடுவதற்கான வேலைத்திட்டமொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரிய ரூபா 2,070,950 ஆன 04 வாகனங்களைத் திருத்துவதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை 08 ஆண்டு காலமாக சபை வளவில் நீறத்தி வைக்கப்பட்டிருந்தன. | டிரெக்டர் மற்றும் ட்ரெய்லர் ஆகிய 02 வாகனங்களையும் ஏல விற்பனையில் விற்பதற்காக விலை மதிப்பீடொன்று மத்திய மாகாண பொறியியலாளர் களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் சிங்கல் கெப் வண்டியை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்காக மத்திய மாகாண பொறியியலாளருக்குச் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | திருத்தங்கள் மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது ஏல விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். |